# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 367/2019

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காருண்யா லட்சுமி | | |
| த/பெ. | உதய குமார் | வட்டம் | சென்னை |
| கிராமம் | வால்டாக்ஸ் ரோடு | வயது | 28 |
| தொழில் | சட்ட மேலாளர் (ஐசிஐசிஐ இன்சூரன்ஸ் கம்பெனி) | மாவட்டம் | சென்னை |

## முதல் விசாரணை

1. நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சட்ட மேலாளராக பணிபுரிகிறனே். நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான்.

## <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ 1 | அதிகார கடிதம் அசல் |
| எ.ம.சா.ஆ 2 | இன்சூரன்ஸ் பாலிசி நகல் |
| எ.ம.சா.ஆ 3 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் |
| எ.ம.சா.ஆ 4 | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |

## மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு வழக்கு விவரம் நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து நடந்த போது நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பணிபுரியவில்லை. விபத்தை ஏற்படுத்திய வாகனம் விபத்து தேதியல் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுநரிடம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 7,500 கிலோவிற்குள் இருந்தால் அதன் பேட்ச் தேவையில்லை என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. அவரிடம் 2031ம் வருடம் வரை எல்.எம்.வி. உரிமம் இருந்தது என்றால் சரிதான். மனதாரர் அனுமதியில்லாத பயணி இல்லை என்றும் அவர் வாகனத்தில் உள்ள பொருட்களை ஏற்றி இறக்குபவர் என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி